இலக்கியம் - வாழ்வின் புரிதலுக்கான கருவி

அரிவை

மாத இதழ்

கையெழுத்துப் பிரதி

இதழ் 4

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

அரிவை

இலக்கிய மாத இதழ்

கையெழுத்துப் பிரதி.

செப்டம்பர் '03

ஆசிரியர் குழு

DR. சந்யராஜேஷ்வரன் M.D

DR. மதுக்குமார் M.D

பொறுப்பு ஆசிரியர்

S. பாஸ்கரன் III - BSMS

இதழ் வடிவம்

E. ரவணன் III - BSMS

உள்ளடக்கம்

* தலையங்கம்
* கவிதை
* மிம்பங்கள் – மொழி பெயர்ப்பு படைப்புகள்.
* புறத்திலிருந்து.

★ படைப்புகள் பிரதி மாதம் 25 ந்தாம் தேதிக்குள் வரவேற்கப் படுகின்றன.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

தலையங்கம்

இனியாவது இந்தியாவில் இந்தியம் அரங்கேறுமா?

பொருளாதார காரணங்களை காட்டி இந்தியனையும் இயற்கையையும் சுரண்டியதற்கு கட்டாக கொடுத்த பதிலடி நீர்பாணம், நைந்துடி நீர், நாய்கறிகள் இவற்றின் புச்சி மருந்து. எங்கே இந்த விதி நடப்பட்டது? எங்கிருந்து இதை ஆரம்பம் உளர்ந்தது? சற்றே பின்னோக்குவோம் - 1960 ல் தாங்கள் நாட்டில் தடை செய்யப்பட்ட பூச்சிக் கொல்லி மருந்துகளை அன்னிய நாடுகள் நமக்கு ஏற்றுமதி செய்தன. வளர்ந்து கொண்டிருக்கும் ஜனத்தொகை அதிக அளவில் தேவைப்பட்ட பொருளாதாரமும் அதிக மகசூல், அதிக லாபம் என்ற பசிப் பார்த்தைகளை நம்பி அதிக நன்மை என்பதை அடிநாக மறந்து, மறைந்து வல்லரசு அடிமைதாக நினைத்து விவசாயம் செய்தோம். பயிர் செய்து உயிர் மாய்த்தோம். பெற்றதாய் பிள்ளைக்கு அவள் அறியாமலேயே தாய்ப்பாலில் DDT யையும் சேர்த்து புகட்டினாள். நாகரிகம் வளர்ந்தது. கூடவே வளர்ந்தன நோய்களும், பெரியும், மனநல் வாடும் கம்பெனிகளும் தான். பன்னாட்டு கம்பெனிகள் ரொட்டித் துண்டை இலையாகக் கொடுத்து, விலை மதிப்பில்லா இந்திய கலாசாரத்தை, இந்திய சாமியார்களை வைத்து இயற்கையுடன் இணைந்த வாழ்வு என்ற பெயரில் மீண்டும் காசாக்கியது.

நம் நாட்டில் பயிரிடப்பட்ட எந்த பூமியையும் பூச்சிக்கொல்லிகள் இல்லாமல் தான் ஏற்றுமதி செய்ய முடியும். அதாவது அவர்கள் நமக்கு ஏற்றுமதி செய்த பூச்சிக்கொல்லி மருந்துகள் இல்லாத பூமியை மட்டுமே அவர்கள் இறக்குமதி செய்வார்கள். நம் முப்பாட்டன் காலத்து பசுஞ்சாணி, வேப்பம் புண்ணாக்கு, தொழுஉரம் இவற்றை Organic famine என்ற பெயரில் நமக்கே அல்வா கொடுக்கிறார்கள். 3 ரூபாய் (60 லட்சம் - உற்பத்தி செலவு, தொழிலாளர்களுக்கான ஊதியம், விளம்பரச் செலவு, வரி இவையெல்லாம் சேர்த்து ரூ 2.80 ஆகிறதென்று ஒரு புள்ளி விபரம் கூறுகிறது). ~~ரூ~~ 3 ரூபாய் ஆகும் நீர்பாணம் லிட்டருக்கு 3 கோடி ரூபாய் நாடு வாரந்தோறும் 10 ரூபாயில் நிற்கிறது. அந்த வேலை செய்யும் தொழிலாளி பத்தில் புள்ளி ஒரு சதவிதம் கூட கூலி வாங்குவதில்லை. நாளிமார்க் போன்ற நிறுவனங்கள் படைத்த நாளி கோயில் போல் பாழடைந்து நிற்கிறது.

ஆனாலும் நம் மண்ணின் மைந்தருக்கு நம் கலாச்சாரத்தை விட நீர்பானங்கள் மற்றும் மனநல் வாடை குடிப்பதின் கர்வமே மேலோங்கி இருக்கிறது. இந்தியா மீண்டும் ஒரு சுதந்திரப் போருக்கு தயாராக வேண்டிய நிலையில் உள்ளது. ஆனால் இந்த முறை பிரிட்டிஷ்காரனை எதிர்த்து அல்ல. ஆனால் உலகமயமாக்கல் என்ற பெயரில் மறுகாலனி ஆதிக்கத்தை நிறுவ முயலும் பன்னாட்டு முதலாளிகளையும் மற்றும் அன்னை பூமியை அடுத்தவருக்கு விற்கும் அரசியல் வியாபாரிகளை எதிர்த்தும்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

புறத்திலிருந்து

நம் கலெக்டரி வட்டத்திற்கு வெளியிலிருந்து பெறப்படும் படைப்புகள்.

சிறுகதை

தலைக்கும் முலைக்கும் வரி

மலையாள மூலம் நாராயண்

மலையின் பலவிடங்களிலிருந்தும் தயங்கியும் பயந்தும் வந்து அவர்கள் கூடியிருந்தனர். அதிகபட்சமாக முடிந்தால் மறைக்கும் முரட்டுத் துணி அணிந்திருந்தவர் சிலரும் இரண்டாம் முண்டை மடக்கித் தோளிலிட்டவர்களும் சீனவாக்கில் கூம்பில் கட்டியவர்களும் கூட்டத்திலிருந்தார்கள். மாற்றியின் உச்சியில் கடை புறத்தில் சாய்ந்துக் கட்டிய குடில் அணைவருக்கும். தலையில் பாணத் தொப்பி சிலருக்கு. தொப்பியின் மேல் பகுதி வெளிப்புறமாக நீண்டு சிறுத்த முனை கட்டப்பட்டிருந்தது. சிலரிடம் வைட்டிவாள்கள் இருந்தன. கறுத்தும் சிறிது வெளுத்ததுமான உடலை உடைய மலை அரயன்மார்கள் அவர்கள்.

நடை தானாகவே நின்றது. அவர்கள் ஒன்று சேர்ந்தார்கள். ஆதிச்சன் எனியனை திரும்பிப் பார்த்தான். எட்டு, பத்துப் பேர்களே இருந்தார்கள். அவன் யாருக்கு என்றில்லாது பொதுவாகச் சொன்னான். "இணங்கினா அடிப்பாங்க. முறைச்சிட்டா கொல்வாங்க. எப்படியானாலும் போகாமல் முடியுமா?"

வரி வசூலிக்கும் வலிய வீடனின் வீட்டிற்குச் சிறிது தூரத்தில் ஒரு பலாமர மறைவிலிருந்து அவர்கள் எட்டிப் பார்த்தார்கள். முற்றத்தில் கூம்பிய போலீஸ்காரர்களையும், அவர்கள் தலைவன் ஏட்டையா வெலாமி பிள்ளையையும் கண்டனர். பானை வயிறும், கீடா மீசையும் சிவந்த கண்களும் காட்டுக் குரலும் சேர்ந்தால்...

அந்த ஆள் அடிக்க வேண்டாம், கடிக்க வேண்டாம். உயிர் தானாகவே போய்விடும். சங்கு முத்திரையுள்ள தொப்பியை எடுத்து உடுக்கையைத் தடவியபடி அவன் முற்றத்தின் வெளியே காறித் துப்பினான். "அவனுங்க இன்னும் வந்து சேரலையா?" ஏட்டய்யாவிடம் இருந்து கேள்வி.

"எல்லாரையும் சாகடிச்சிருவாங்க." அரயன்கள் மீண்டும் முணுமுணுத்தார்கள். முற்றத்தில் ஒரு கட்டிலில் மைத்தை விரித்துத் தலையணையுடன் பார்வத்தியக்காரர் (கிராம அதிகாரி) மல்லாந்து கிடந்தார்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

பக்கத்தில் மர நாற்காலியில் பயணத்தின் மீது தாக்கிக் கட்டிய முன்றும் ரண்டாம் முன்றுமுள்ள வலிய விடன் கிடந்தன. மார்பின் அபர்ந்த ரோமக் காட்டின் மறைந்தும் மறையாமலும் கறுப்புக் பயணத்துடன் கூடிய சிலுவை. வெற்றிலையில் சிவந்த உதடுகள்.

ஒரு வேலையான் விரம் ஒசிந்திக் காண்டை அடுபவத்தபடி பார்வத்தியக்காரர் கேட்டிரபடம் ஏதோச் சொல்லிச் சிரித்தார். கீழ் உத்யோகஸ்தனான மெள்ளை - பரமு மெள்ளை - கூர்ந்த காதுகளுடன் தன் மேலதிகாரியையும் கேட்டிரனையும் மாறி மாறிப் பார்த்தான். இடையிடையே சிரித்து, சில நொடிகளில் கண்ணடித்து அவர்களது ரசியல்கனை முக சேஷ்டையில் மறுதலித்தான்.

அடியாட்களும் போலீஸும் ஒன்றாக இணந்தனர். ஒரு கும்பலுக்குக் கூப்புத் தாப்பியும் காக்கி டிரவுசரும். மற்றவர் களுக்குத் தலையல் கட்டும், கருப்புப் பட்டையும். அவர்கள் ஒரு வர்க்கத்தினர் தானே.

யார் முன்னால் செல்வது? கூப்டாமல் முன்றத்தில் ஏறினால் அவமரியாதை நிகழக்கும். எதிர்பார்த்து நின்ற ஒரு போலீஸ்காரன் அவர்களைக் கவ்டான். வேலாம்மெள்ளையிடம் சொன்னான், "அய்யா, அவங்க வந்திட்டாங்க." தலையுயர்த்திச் சாய்ந்து நோக்கிய பார்வத்தியக்காரர் கேட்டிரனைப் பார்த்தான். "கூப்பிட்டா மாத்தா?" ராஜமானின் கட்டளையைக் கேட்ட திவந்த கண்ணன் மாத்தன், மீசையைத் தடவினான்.

தலையில் கட்டியிருந்த துணியை அவிழ்த்து விரிக் காட்டினான். "வாங்கபா. கூப்பிட்டது கேக்கலையா?" பயமிருந்தாலும் ஆதிச்சன் தான் முதலில் முன்றத்தை அடைந்தான். அவனைத் தொட்டபடி பின்னால் கண்டன், முண்டன், கருத்தன் ஆகியோர். சிலர் முன்றத்துக்கு வெளியிலேயே நின்றார்கள். அவர்கள் அனைவரையும் கூர்ந்து நோக்கி கேட்டிர கத்தினான், "இவ்வளவு பேர் தானடா? வந்திருக்கறது யாருன்னு தெரியுமா? உங்கள் எல்லார் ஈ.ரலையும் நசுக்கிப் போடுவார்."

மிகவும் பணிவுடன் ஆதிச்சன் சொன்னான். "நடக்க முடியாதவங்களும் உடம்புக்கு முடியாதவங்களும் வரல்ல."

"உங்களுக்காக நாங்க மலை ஏறி வரணுமாடா?"

"வேணாம்." கேட்டிர சற்று அமைதியாகப் பார்வத்தியக்காரரிடம் சொன்னான். "அய்யா, இவனுங்களுக்கு உத்தரவு கொடுத்தா போயிடுவானுங்க."

"ஹிம்." பார்வத்தியக்காரர் எழுந்து கொண்டார். அடைகனை உதறிக் கட்டிக் கொண்டார். சிவப்புப் பட்டில் சாந்தி வைத்து கருத்த ஆலையை எடுத்தார். ஏணையை இரண்டு முனைகளையும் பிடித்தபடி நாற்றியின் நடப்பாகத்தைத் தொட்டார். சாந்தியும் பார்த்துக் கொண்டதோடு கருமித் தொண்டையைச் செருமினார்.

"எல்லா அடிமைங்களும் கேளுங்கடா."

காதைக் கூர்மையாக்கி நின்று கொண்ட அரயன்கள் கடிவிடிந்து தாக்கும் பரபரப்பில் பயந்திருந்தார்கள்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

பார்வத்தியக்காரர் யோசிக்க நேரம்எடுத்தார். "மான்ய ராஜ ராஜ ராஜஸ்ரீ பத்மநாபதாஸ ஸ்ரீ வஞ்சி ராஜ்ய நபதி..." கேட்டிர சற்றுக் கேலியோடு பார்வத்தியக்காரரைப் பார்த்து வெட்டு மன்னையிடம் சொன்னான், "அப்படி யோசிச்சா எதுதப் படிக்கத் தெரியாதவங்களுக்கு எதுவும் புரியுமா? உத்தரவு என்னன்னு சொன்னா போறாதா?" அது போதுமென்று நினைத்த பார்வத்தியக்காரர் கரண்டாவது ஓலையையும் திருப்பினார். அரயன்களை நிதிப்பாகப் பார்த்துவிட்டு யோசிப்பைத் தொடர்ந்தார். "திருவிதாங்கூர் மகா ராஜ்யத்தில் மழையோரங்களிலும் காடுகளிலும் காலம் காலமாகக் காடுவெட்டி, விதைத்து, விவசாயம் செய்து வினைவைத்துக் கொண்டிருக்கும் அரயன், ஊராளி முதலான கீழ் ஜாதிக்காரர்கள் அறிந்திருக்க வேண்டிய விஷயம் என்னவென்றால், நீங்கள் ஏலம், மிளகு முதலானவற்றை மண்டபத்து வாடுக்கல் தாசில்தார் போன்ற கணக்கு அதிகாரிகளின் அனுமதி இல்லாமல் வெளியிடங்களில் விற்று வருவதை நாம் அறிய நேர்ந்தது. நம் பிரஜைகளாயிருக்கும் நீங்கள் ஏலத்தையும், மிளகையும் தாசில்தார் முதலான கணக்காக் காப்பாளர் நிச்சயிக்கும் அரசாங்க விலைக்கு அரசாங்கத்திடமே விற்றுக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்யாதவர்களை கடுமையாகத் தண்டிக்க வேண்டும் என்றும் நாம் ஆணையிடுகிறோம்."

"புரிஞ்சதா ஒங்களுக்கெல்லாம்?" ஏட்டையாவின் கேள்வி.

"புரிஞ்சதுங்க." பயத்துடன் கூடிய பதில்.

"ஒருத்தனும் ஒரு மிளகோ ஒரு ஏலமோ கொடுக்காதது ஏண்டா?"

ஏதோ அற்புதச் செய்தியைக் கேட்டது போல அரயன்கள் வாய் பிளந்து நின்றார்கள். 'நாங்க கொடுக்க வச்சி இருந்ததெல்லாம் நட்டிப் பறிச்சுட்டு போயிட்டாங்கள். ஏலை யொன்றும் தரல' என்று கூவைச் சொல்லத்தான் ஆசை. ஆனால் பயம். நா எழவில்லை. மிளகும் ஏலமும் சிமந்து வலையிடன் திண்ணையில் கொண்டு வந்து சேர்த்த முதுகுவலி நீங்கவில்லை. 'இது கொலைச் சதி' அவர்களுடைய முணுமுணுப்பு கட்டிரயிக்கச் சகிக்க வில்லை. "கெட்டீங்களா திருடனுங்க குசுகுசுப்பது. இவனுங்களில் யாரும் ஒருபுடி ஏலமோ மிளகோ கொண்டு வரல. கொண்டு வந்தவங்களுக்கி சக்கரம் (பணம்) கொடுத்திருக்கோம்.

ஆதிச்சனால் அதிக நேரம் பொறுக்க முடியவில்லை. உரக்கச் சொன்னான். "ஒரு மூட்டை மிளகுக்கு ஒரு சக்கரம் கூட தந்ததில்ல. ஒரு கைப்புடி யொகையில பொடி மட்டும்தான்," சொல்லி வாய் மூடுவதற்குள் மாந்தன் சட்டென்று அவன் முகத்திலறைந்தான். கன்னங்களைப் பொத்திக் கொண்டார்கள் வரி செலுத்த வேண்டிய அனைத்து அரயன்களும்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

"மானகையெல்லாம் இவனுங்க பாண்டிக்காரன்களுக்குக் கொடுப்பானுங்க. இவனுங்க பொண்ணுங்களப் புடிச்சி பொலயனுங்க கிட்ட கொடுக்கணும்."

கட்டிரயை வலிக்கிக் கொண்டு கிராம அதிகாரி கேட்டார்.

"உங்க பொண்ணுங்களுக்கு இன்னும் மொலை வரலயாடா?" அரயன்கள் முகம் சிளிக்கையில் கிராம அதிகாரி தொடர்ந்தார். "அரயத்திகளுக்கு மொலை வளர்ந்தா உ சங்கரம் வரி. வேலை செய்யும் அயச வந்த அடிமைகளுக்குத் தலையொண்ணுக்கு ரெண்டு சங்கரம் வரிகட்டுங்கடா."

வெட்கப்படத் தொடங்கியவர்கள் முகம் முறுக்கி சங்கிலிக்கையில் ஏட்டையாவின் அதட்டல். "கேட்டீங்களாடா?" ஒரு அரயனைப் பிடித்துக் கர்ஜித்தான். அவன் தடுமாறிக் குப்புற விழுந்ததும் முகமில் ஒரு மிதி.

அதைப் பார்த்துப் பயந்த ஒரு அரயன் சொன்னான், "பொண்ணு வயசுக்கு வந்தா மொலை பெரிசாகாம காக்குமா? உசிரோட வாழ்ந்திருந்தா ஆண் ஆணாகும், பெண்ணானாகும் தலை காட்டோதிருப்பாங்களா? எல்லாரையும் சிறைக் கொல்ல முடியுமா?"

அவர்கள் மனம் கலங்கி கொண்டு கருக்கம் போது வந்தரவின் கடைசி பாகம்: "எல்லா அடிமைகளும் மகரம் (ணை) முப்பதுக்கு முன்னா வரிகட்டணும். கப்பாதவர்கள முக்காலயின் கழுத்தை அறுப்போம். குடிசைகளுக்குத் தீவைப்போம். பொண்ணுங்களப் புடிச்சி மினப் பொலயனுங்களுக்குக் கொடுப்போம். பிள்ளைகளைப் பிச்சையெடுக்க வைப்போம்."

ஒரு கூடி விழுந்து எல்லோரும் கருக ஏடக் கூடாதா? மலையிலும் காட்டிலும் கிடக்கும் அந்த மக்கள் மண் நோக்கி முகம் குனிந்தார்கள். அப்போது கட்டிரயின் அலறல். "தாசில்தார் அய்யா, அங்க நிக்கற ஆதிசேரன் தான் காந்தக் குடிபடுக்குத் தலைவன். எல்லோருக்கும் சேர்த்து அவன் வரி கட்டட்டும்."

"ஆமா, கேள்ளன்னா அவனப் புடிச்சா போதுமில்லையா?" ஏட்டையா ஆதிச்சனை ஏறெட்டினார்.

"என்னடா ஒம்பேர்?"

"தாளநாந்தி கண்ட ஆதிச்சன்."

"தாணாந்தவன் வேற உண்டாடா?"

"எனக்குத் தெரியாது."

உத்தரவு எல்லாருக்கும் புரிந்ததா என்று உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டும். பார்வதியக்காரர் மீண்டும் உரக்கக் கேட்டார், "அடிமைகள் எல்லோரும் கேட்டீங்களாடா?"

"உத்தரவுன்னு சொல்லுடா எருமை." ஒரு போலீஸ்காரன் ஆதிச்சனின் தலையில் ஓங்கிக் கட்டினான். "நீ, கவுங்கள எல்லாம் தொட்டு குனிக்கணும்."

"ஹஹஹ, அந்த மாத்தன் கிட்ட சொன்னாப் போதாதா? கான்ஸேமன், அவனோட கை அரிப்பு குறைக்கிடும். நீங்களும் குனிக்கப் போக வேண்டாம்." கிராம அதிகாரி ஏட்டையாவைப் பார்த்து சிரித்தார்.

"ஒலக்கால் சீலக்கால் முடங்கினால் நாரணா மிள்ளக்கு தேகம் அசைய வேண்டாம், கல்லையா வேலாம் மிள்ள?"

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

"ஆமாம்." சாப்பிட வருமாறு ஒரு ஆள் வந்து அறிவித்தான். கட்டிட எஜமான் நின்றான். குனிந்த முகங்களைக் கூர்ந்து பார்த்தான். "எல்லாரும் போங்கடா." எவ்வளவு பெரிய நிம்மதி. பல திசைகளில் பாயும் முன்பே முன் அறிவிப்பு. "பின்ன, என்னைச் சும்மா அடிக்கடி மலை ஏற வைக்காதீங்க. தை முப்பதுக்குள்ள எல்லாரும் வர கட்டிடணும்."

எதிர்த்துச் சொல்லக் தைரியமில்லை. நம்மிடம் நம்பிக்கையுமில்லை. நமக்கான் ஒற்றுமையல்லை. அவமானப் பட்வர்களால் மண்ணைப் பொன்னாக்குபவர்கள் குனிந்த முகங்களுடன் மலைவழியே திரும்பி நடந்தனர். அவர்கள் செல்வதைப் பார்த்து கட்டிட, பார்வத்தியக் காரருக்கு நினைவு உட்டினான். "கண்ணிக்கு வந்த ஒவ்வொருத்தனையும் கணிசமே பார்க்க முடியும்னு நினைக்க வேண்டாம். வரி வசூலிக்கலன்னா அய்யமார் கோபிப்பாங்க."

"கட்டிரயக்கு ஆதிச்சணைப் பிடிக்க முடியுமே?"

"ஆமாம். மொதல்ல காடு ஏர்றவனாயிருக்கும்."

"அடியாளுங்க கருக்காங்களை அவங்கள அனுப்பணும்."

"அவங்க கணம் எனக்குத்தான் தெரியும்."

அவித்த கறி, சாராயத்தின் மணம் பிடித்து மூக்குகள் விடைத்தன. வாய்களில் எச்சில் ஊறிற்று. பசியால் பட்டிய வயிறுகளும் சிரம்பப்பட்டு அவர்கள் மலையேறினர். மேலக்காவின் அருகிருந்த பாறைகளில் அரயன்கள் கணைப்பாறினர். கிடைத்த நேரத்தில் வலிய வீடனின் அதிகார-அநியாய - அக்கிரமங்கள் பற்றியும் அதிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ளும் வழிகளைப் பற்றியும் பேசி ஆயிந்தனர்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

"மேலக்காவு அம்மா. வலிய வீடனின் நினைக்காவுகளைப் பாம்பு கொத்தணும்". நினைத்தனர். காவின் அடிமை உயரே பார்த்து நடப்பான். வலிய வீடன் எல்லாரையும் ஒன்று சேர்த்துக் குழிவெட்டி மூடுவான். யொன்றை நம்மிரான் உந்தறது. ஒண்ணுக்கு ரெண்டுக்கு மடிடமல்ல. குரவெட்டாலும் வரி கேப்பாங்க. கொருக்கலன்னா அடியாளுங்க வந்து எல்லாரையும் மிரட்டி அடிப்பாங்க. போன வருஷம் பச்சப்புள்ளையையும் கட்டி வச்சிக் குடிசைக்குத் தீ வைச்சாங்க. மகளப் மிரட்டிக் கற்பழிச்சிப் பொலயனுக்குக் கொருக்கல்லையா? கேட்க என்ன நடந்தது? மிரட்டிப் போன பொண்ணு ஓடிப் போயிட்டா ன்னாங்க. கச்சிர சத்து வாயிக்கா ஒரத்துல தூணியில்லாம கெடந்து தெரியும் இல்லியா!"

"அந்த அரயனுங்க நாயிங்க. ஒருத்தனுக்கும் ஒரணையில்ல."

"ஒரணை இருந்து என்னடா பிரயோஜனம்? ஒருத்தன் கொன்றதப் பார்த்தாலும் சும்மா பார்த்து நிப்பானுங்க."

"மொளகுக் கொடிகள வெட்டிக் கொளுத்திட்டு குடிசையையும் எரிச்சிட்டு நாடுக்குப் போயிரலாம்."

"மலை கடந்து கெழமலை நாட்டுக்கு போய்ட்டா? அங்க வலிய வீடனும் அடியாளுங்களும் வருவாங்களா?"

"தெரியாது."

மகரம் பாதியாக வெட்டு. வரி வசூலிப்பவன் கொடுத்த கோணிப்பை அரசாங்கத்தினுடையது. தொங்கல் வெளுத்தது.

அதை அப்படியே உபயோகிக்க முடியாது. புகை போட்டு நாறடிக்க வேண்டும். காலத்தின் பரிந்துலர்த்திய ஏலந்தையும், மிளகையும் நறுந்த நாக்குப் பைகளில் கட்டி வைத்தாயிற்று.

அரயன்களுக்கு ஒன்றும் கொடுக்காமல் அனைத்தையும் கட்டி எடுக்க வேண்டும். மிளகும் ஏலமும் எவ்வளவு கொடுத்தாலும் நல்ல விலைக்குப் பாண்டித் தமிழர்களிடம் விற்றுவிடலாம். அவர்களுக்கு அவசியமெனில் வளாகத்து முதல் கிட்டிக்கல் வரை எடுக்க, பத்து அடியாட்களை உதவிக்குக் கூப்பிடுவார்கள். தொள்ளையடிக்க வரும் மீனப்புலயன்களைப் பாண்டியர்களின் வேலையாட்களும் அடியாட்களும் சேர்ந்து எதிர்ப்பார்கள். மதுரையிலிருந்து மலைப்பாதை வழி மேலக்காவு, வாளகத்து, வழிந்தல, திருவாங்குளம் கடந்து கொச்சி வரை வந்து திரும்புவது வியாபாரிகளின் - பாண்டியர்களின் - வழி. சரக்குகளைச் கொச்சியில் விற்றுப் பணமாக்கி வருகையில் மலையடிவாரங்களில் மீனப்புலயன்கள் என்றும் கொள்ளையர்கள் தொல்லை. அவர்கள் எங்கிருந்து வருகின்றனர் என்பது யாருக்கும் தெரியாது. கொள்ளைத் தரப்படவில்லை யெனில் ஒட்டுமொத்தமாகப் மின்பற்றும் அரயன்களைத் தொல்லைப் படுத்துவார்கள். தலையும் முலையும் மிருவீடமும் பெருத்த அரயத்திகள் அடிகள். புலயன் தீண்டிக் கெட்டவளை அவன் ஆதிக்காரர்கள் முன்றத்திலும் ஏற அனுமதிப்பதில்லை. தொட்டவன் மிரட்டிச் செல்வான். தன்னுடைய ஆசையைத் தீர்த்துக் கொண்டு மதுரையில் நல்ல விலைக்கு விற்றுவிடுவான்.

ஒரு புன்னகையுடன் குட்டிர மேலும் நினைவுகளில் மூழ்கினான்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

வரி கட்ட வில்லையென்றால் அதிகாரிகள் கேட்பார்கள். பொருள்களை அரசன்கள் பாண்டியன் கருவூலத்தில் ஏற்பதை அப்போது சொல்லலாம். சுருக்குப்பைகளை தேடிப்பிடித்து கட்டிக் கூடு ஏறுகின்றனர். பாண்டியன்கள் மதுரைக்கு வந்து தாக்கி தங்கார்கள். அப்போது சொல்லலாம் பொருள்களை அரசர்கள் பாண்டியர்களுக்கு ஏற்று வைப்பார்கள். பணப்பையை தேடிப்பிடித்து கட்டிக் கொண்டு மலை ஏறிவிடுவார்கள். பாண்டிக்காரன் மதுரை போய்ச் சேர்ந்து காப்பார்கள். பெரிய அடியாள் மாத்தன் கிலைமையில் அணைத்து ஆயுதங்களையும் ஒரு கூட்டம் மலை ஏறிற்று. கண்ணில் படும் அரசன்களையெல்லாம் அடித்துத் துரத்தினான். கொஞ்சம் பேரைப் பிடித்துக் கட்டி துன்புறுத்தினர். கிழவர்கள் குடிசைகள் பற்றி எரிந்தன. பெண்களும் பிள்ளைகளும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓடும் போது அடியாள்கள் கூவினர். "போங்கடி போங்க. மரத்தடியில் பொலயணுங்க கூப்பாடுங்க."

பலவந்தமாகப் பிடுங்கிய கிழவியும் நகத்தையும் கூட்டைகளாக்கிப் பிடித்துக் கட்டிய அரசன்களின் தலைகளில் ஏற்றினார்கள். கைகு செத்த களைப் பெண்கள் ஓடிப் போகாதவாறு கால்முண்டு பேரின் கைகளைச் சேர்த்துக் கட்டித் தள்ளிச் சென்றனர்.

தொம்மாமகன், அரசன்கள் சீமைப் பணைகளில் ஏறி கள் குடித்தனர். பாணைகளைத் தள்ளியுடைத்து, தலைகளை வெட்டி, தாண்டவமாடி வரும் போது தான் ஆதிசீனன் ஏவலைக் கண்டனர். சுற்றி வளைத்தனர். அங்கு யாருமில்லை. "தீ வையுங்கடா" மாத்தன் அலறினான். மூன்றாம்தரகனின் கட்டி நிறுத்திய கலியுருண்டை போல லட்சணமான பசுவும் கன்றும். "ஓடாய்ப் பிடித்துக் கொண்டாடா". ஒரு அரயனைத் தள்ளி ஓட்டப் பசுவை அவிழ்த்து நடத்தினான்.

சீமை தாக்கிய நிலையில் அரயன்கள், கைகள் கட்டப்பட்ட பெண்கள், கட்டியழுத்த நிலையில் பசுவும் கன்றும், கள்ளின் போதையில் தொம்மாமகனின் வெற்றிக்கூத்து.

ஆரவாரித்து வரும் கூட்டத்தைக் கண்டு கட்டிர மகிழ்ச்சியடைந்தான். கொண்டு வந்த பொருள்களைச் சிக்கிரமே அகற்றினர். அரயத்திகளை ஒரு சிறிய அறையில் அடைத்தனர். ஓடிப் போகாத வகையில் காவலும். உறவுகள் போலத் தொரிந்த கால்முண்டு அரயன்களை அழுந்து வாரவுக்கிக் கூவிய வைத்து அவர்களின் முகங்கள் கனமான கற்களை ஏற்றி வைத்தனர். ஒருவனின் காள்களில் – மூடுவியொடிருக்க – இருபுறமும் கட்டைகளை மாட்டிப் பூட்டினர். கடியும் அடியும் வாங்கியதில் அவன் காலொடிந்தது. அழுயா

அடியாட்கள் படை வந்தபோது காட்டில் ஒளிந்திருந்த சில அரயன்கள் ஓன்று கூடினர். அவர்களுக்குத் தெரியும், எருக்குச் செல்லப்பட்ட எந்தப் பொருளும் வரி ஆகவில்லை. வரி கட்டாததற்குத் தண்டனை வேறு. அது கிரிமேல் தான் வரும். உயிர் வாழ ஆசை வேண்டாம். பிடித்துச் சென்ற பெண்களை என்ன செய்வார்கள் என்பது தெரியும். ஆண்களைக் கொல்லாமல் விடுவார்கள். யாரும் எதுவும் கேட்க முடியாது.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

வலைய விடனின் கடந்திற்குத் தான் மட்டும் போகலாம் என்று ஆதிச்சன் தீர்மானித்தான். "பொதுத் சாய முன்ன நா வரலன்னா எதுத்துட்டதா நீங்க முடிவு பண்ணலாம்."

"நீ மட்டும் ராக வேணாம். நாங்களும் வர்றோம்." நான்கைந்து பேர் சேர்ந்தனர். அவர்கள் கூட்டரயின் விரு நோக்கி வேகமாக நடந்தனர்.

அரயன்களைக் கண்ட கூட்டர அதிகாரமாகக் கத்தினான். "என்னடா நாய்களா?"

ஆதிச்சனும் கத்தினான். "நேரு நாலு பொண்ணுங்கள, அங்சாரு ஆம்பளங்கள அடியாளுங்க மிரட்சி கொண்டிருக்காங்க. ஒரு பசுவையும் கன்றையும்."

"ஆ, வரி கொடுக்கல கல்ல?"

"கவபடியல்ல வரி கட்டி வைக்கறது? நீ வர்றதுக்கு முன்னயும் இங்க ஆளுங்க வரி கட்டியிருக்காங்க."

"பேசாதடா, அந்தத் தொழுவத்துக்கு அவளையே போய்ப் பார். அவங்கதானான்னு."

நிலையில் படுத்துப் படி நிலையில் நின்றாள். அவள் கால்கள் அழுந்திருந்தன. எரிமலை வெளியில் தெரிந்தது. உயிர் போகவில்லை. நாகம், முதுகில் பெரிய கற்கண்டன் குளிர்ந்த நிலையில் இரு நரிகள். அவர்களின் முகம், நெஞ்சு உடல் முழுவதும் பிணங்கிகளின் எரிமலைகள். பெண்கள் யாரும் இருப்பதாகத் தெரியவில்லை.

"ஏண்டா, ஆதிச்சா, செத்துவமுங்கள கிடுத்து அந்த மாமரத்தடியில எங்கனா புதைடா."

திரும்பிப் பார்த்த ஆதிச்சனால் தன் கண்களையே நம்ப முடியவில்லை. கறுப்பு பசுவின் தலையை வெட்டிக் கையில் வைத்திருந்தான் ஆள். இரண்டு மூன்று பேர்கள் தோலி உரிக்கப்பட்ட பசுவைத் துண்டுகளாக்கிக் கொண்டிருந்தனர். கொல்லப்பட்ட பசுவின் உடலில் இரும் புவியோர் வெட்டும் ஆதிச்சனுக்குத் தன் நெஞ்சில் விழுவதாக இருந்தது.

ஆதிச்சன் அலறினான். "என் கறுப்பிய கொன்னுட்டீங்களேடா?"

ஓடிப் போய், வெட்டுகிறவனிட மிருந்து வெட்டரிவாளைப் பிடுங்கி எல்லோரையும் வெட்டிச் சாய்க்கணும். கை ஓங்கிய ஆதிச்சன் கால்கள் இடறப்பட்டு விழுந்தான். கடந் விழுந்தியவன் ஆதிச்சனின் குடுமியைப் பிடித்து உயரத் தூக்கினான். கூட்டர முன்னால் வந்தான். "நீ எல்லார் கிட்டயும் வரி கட்ட வேணான்னு சொன்னியாடா? சொல்லுடா?"

"மீனாகையெல்லாம் அடியாளுங்கள ஏவி விட்டு பறிச்ச கல்ல?"

"என்னடா எதிர்த்துப் பேசற? ஒருத்தனையும் உசிரோட விட மாட்டோம். அரயனுங்க யாரும் இந்த அரசாங்கத்துக்கு வேணாம். ஏண்டா, உம்மச்சா, அரயன் கல்லுல மொளச்ச முராமணன்னு சொல்றாங்க. ஆச்சாரமானவனுங்க. அவனுக்கு அந்தக் கன்னுக் குட்டியின் தலையையோ காலையோ கொடு. சட்டுத் தின்னட்டும்."

"எனக்கு வேணாம்."

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

"அதிகமில்லடா. ஒரு நூறு ஆளைச் சீ தான்."

"ஆ, அப்படிச் சொல்லாதடா மாமக்காரா. காவிகக் கொண்டாடா இவன் தின்னுப் பாக்கட்டும். இவனைத் தின்ன வைங்கடா."

மாத்தன், ஆதிச்சனை கூடி விழுத்தினான். இரண்டு மூன்று அடியாள்கள் இழுத்துப் பிடித்தனர். கைகளிலும், நெஞ்சிலும் ஏறி மிதித்தனர். கன்னங்களில் அறைந்தனர். நாடையை அழுந்திக் திறந்து வாயில் ஒரு நூறு பச இறைச்சியை வலியத் திணித்தனர். மிரளும் வரை வாயை அடைத்து மூச்சுத் திணறச் செய்தனர்.

"ங்ஹரீம்." முகத்திலொரு உதை.

"என்ன மரடுமல்ல, ஏன் அப்பணையும் தின்ன வைப்பம். அவ்வளவு திமிராடா?"

ஆதிச்சன் வாந்தியெடுத்தான். தன்னி எழுந்து நந்தினான். "வலிய வீடா, அந்தப் பொண்ணுங்களெல்லாம் எங்கே?"

"அண்ணாருந்தன் தொட்டுப்பாண்டா நாயே. பொலயன்மார் கொண்டும் போயிட்டாங்க. நீயும் வேணுன்னா முன்னால போகலாம்."

மாத்தன் விலக்கினான், "மொதலாவ வேணாம். மகா ராஜாவுக்கு வரி வசூலிச்சுக் கொடுக்கணுன்னு சொன்னவனக் கொல்ல வேணாம்."

"ஆ, எனக்கு ஞாபகமில்ல, விடுங்க."





AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

அரயன்கள் வரிகட்டாதது மட்டுமல்ல, மேலும் பல விஷயங்கள் அறிந்த மண்டபத்து வாசங்கள் என்ற பெரிய உத்யோகஸ்தன் நாசிந்தாருக்கு உத்தரவு கொடான். "நமக்கு உண்மை தெரியணும். ஒங்க ரிப்போர்ட் பிறகு பொய்யாகக் கூடாது. மகாராஜாவையும் சொல்ல வேண்டிய சாங்கதியாக்கும். ரெசிடெண்ட் துரையும் கோபத்துல இருக்கார். யார் இந்த வலிய வீடன்?"

"அரயன்கள் கிட்ட உரிவசூலிக்கற கூட்டர."

"அவரைங்க பொருள் எல்லாத்தையும் வெள்ளையடிச்சி, குடிசைங்களுக்குத் தீ வச்சுத்தானா வரி வசூலிக்கணும்? நாமதிக்கக் கூடாது. உடனடியா நீர் ஏஜாரிசு வாங்க."

"உத்தரவு."

பார்வத்தியக் காரரையும் மிர்சியையும் நாசிந்தார் கூப்பிடுவார்.

"ஒங்கள் யாருக்கும் இந்த விஷயங்கள் தெரியாமலா இருந்தது?"

"கூட்டரக்குக் கொஞ்சம் கூடப் போச்சுண்ணு கேள்விப்பட்டோம். அதிவனுத்ததுக்குக் கொஞ்சம் தாமதமாக் வந்தது."

"அந்த ஆளோட கொள்ளையில ஒங்களுக்கும் பங்கு உண்டு இல்லையா? மடிபட்ட பாண்டியர்கள் எல்லாத்தையும் ஒரு நிலை வைப்பார்கள். குற்றம் நிரூபிக்கப் பட்டா கடுமை எண்ணத் தயாராய் இருங்கணும்." கூட்டரயிங்க எந்த முன்னறிவிப்பும் தொடுக்கக் கூடாது என்ற எச்சரிக்கை.

நாசிந்தாரின் தலைமையில், பார்வத்தியக்காரர், கீழ் உத்யோகஸ்தர், போலீஸ் ஆகியோர் ஒன்றுமறியாத பாவத்தில் கூட்டரயின் முற்றத்தை அடைந்தனர். வரவேற்பையும் உபசரிப்பையும் எதிர்பார்த்த நாசிந்தார் அரயன்களைக் கொண்டு வர உத்தரவிட்டார்.

கூட்டரயின் அடியாட்கள் குதித்து ஓடினர். அக்கிரமத்திற்குப் பயந்தவர்கள் உயிரைப் பிடித்துக் கொண்டு தலை தெறிக்க ஓடித் தப்பினர். கருத்த - உயர்ந்த பேரைப் போலவே மனக் கருப்புள்ளவன் - அடியாட்களைக் கண்ட வேகத்தில் வெட்டரிவாளைத் தீட்டினான். முலை அரும்பிய மகள், மீசை முளைக்கத் தொடங்கிய மகன் இருவரையும் வெறுப்போடு, சாங்கத்தோடு பார்த்து நிற்கையில் நெஞ்சு வெடித்து இறந்து போயிருக்கலாம் என்று நினைத்தான். எப்படி? ஐயோ, கைகள் துளிர்ந்து போகின்றன. கொல்லை மலை நடுங்கும் ஓங்கிய அக்கிரமங்கள் பகிரங்கத்தில் நடக்கையில், அவன் வேதனையில் விறைத்தான். மகள் தைரியசாலியாக அரிவாளைத் தீட்டுகிறாள். எதற்காக என்று கேட்க இல்லை. நெஞ்சில் தங்கிக் கிளர்ந்து கிடக்கும் அவமானத்தை அறுத்துத் தூர எறிவதற்கா?

அடியாள்கள் அடித்தும் மிரட்டியும் இழுத்துக் கொண்டு வந்த ஆறு சில அரயன்கள். அவர்களது குடும்பங்கள் அலறிக் கிடந்தன. முகங்களும் உடல்களும் காயப்பட்டிருந்தன. ஆடைகள் கந்தலாகி இருந்தன. ஏன் என்று கேட்க யாரும் இல்லை. தலையை இடிந்து பலியாகப் போகும் ஆபத்திலிருந்து காப்பாற்றப்பட வேண்டும் என்ற மிருகத்தின் ஏக்கம். சில முகங்களில் சாகப் போகும் பாவம்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

உண்மை. மீண்டும் முயற்சியில் வெற்றிபெற்ற நாசிர்தார் ஒவ்வொரு முகத்தையும் கூர்ந்து கவனித்தார். பிறகு வரி வசூலிப்பவனையும் தன் கீழ் உத்தியோகஸ்தனையும் பார்த்தார். யார் குற்றம்? யார் குற்றவாளி? குற்றமற்ற நிரபராதிகளாகத் தோன்றியதால் அரயன்களிடம் பேசினார். "உங்களை யாரும் அடிக்கவோ தொல்லவோ முடியாது. அதுக்கு யாருக்கும் அதிகாரமும் வழங்கப்படவில்லை. சொல்லுங்கள். உண்மையைச் சொல்லுங்கள். என்ன நடந்தது?"

ஆதிச்சன் குழுவுடன் முன்னால் வந்து கொழுந்து தீர்த்தான். வரி வசூலிப்பு என்ற பேரில் கட்டிய தம் உடைமை முழுவதும் கொள்ளையடிக்க நடத்திய கொலை தனை விவரித்தான். ஆதிச்சன் விசுவகணை பற்றிக் கவலைப்படாமல் வலிய விடுதலை முகத்துக்கு நேராக ஏறலை நீட்டினான். அவனுடனிருந்தவர்கள் கூறினார்கள். "சொன்னதெல்லாம் உண்மை. எஜமான் கேட்கலாம். நாங்க குற்றவாளிங்கன்னா கூட்டத்தையே கொன்னு போடுங்கள்".

கூட்டம் கோபத்துக் கர்ஜிக்கிறான். "புலுகறானுங்க." ஆதிச்சனை அடிக்க கை ஓங்குகிறான்.

"வேண்டாம். நீ அப்படியே".

"அய்யா, இவனுங்க ஏலத்தையும் மலையையும் பாண்டியன் நமக்கு விக்கிறானாங்க".

"ம், பாண்டியர்கள் உன்னை வரண்ட பேர் முடிபட்ட நிலையில் கலங்கினார்கள். ஏலமும் மலையும் யார் கிட்ட வாங்கினதென்றும், பன்னிரண்டு அடியாள்களை யார் அனுப்பியதென்றும் அவர்கள் வாயில் ஒப்பார்கள்."

கூட்டம் நடுங்கினான். தப்பிப்பது பற்றி யோசிக்கையில் நாசிர்தார் போலீசிடம் கட்டளையிடுவார். "விடாதீர்கள் அவனை."

அவர் மீண்டும் அரயன்களிடம் கேட்பார். "எல்லாரும் முலைவரியும் நல வரியும் கொடுத்தீர்களா?"

"ஒண்ணும் கொடுக்கல. கப்பப்பட்ட விளைய வச்சத எல்லாம் அடியாளுங்க வந்து புடுங்கிப்பாங்க. குடிசைகளுக்குத் தீ வைச்சிப்பாங்க. பொண்ணுங்கள படிச்சிட்டுப் போயிடுவாங்க. கட்டிக்கத் துணி கூட வைல."

"அரசாங்க உத்தரவுப்படி நடக்கலன்னா தலை போகும்னு தெரியாதா?"

பயங்கர ஓர் அலறல் மட்டும் கேட்டது.

அப்போது கந்த விலாடிப் பாய்ந்து வந்தான். ஒரு கையில் அவிழ்ந்த குடுமியைத் தூக்கிப் பிடித்த நிலையில் மனைவியுடைய தலை. மறுகையில் ரத்தம் ஒழுகும் வெட்டுவாள். பின்னால் மகன். சுட்டெரிக்கும் கண்களுடன் நாசிர்தாரைப் பார்த்த கந்த கத்தினான், "இந்தா தல, இதுக்குத் தானே வரி. ஒன் தம்புரான் கிட்ட கொண்டு போய் கொடு. தின்னட்டும்." அருகிலிருந்த அவன் அங்கிக் கழுத்தில் வெட்டினான், தலை விழுந்து துடித்தான்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

நருந்தயின் மகள்
நாயின்தாரை முறைந்துப் பார்த்தாள்.
" இந்தா என்னோட மொள,
இது இருக்கறதான தானே வரி ?"
அரியாளாள் ஏரே வெடு. முனையனில்
ஏன்று ரத்தத்தைப் பீயிச்சி
அடிந்தது. நாயின்தானின் முகத்திற்கு
நேரே வீசி அவளும் வீழிந்து
நடிந்தாள்.

" அடிந்தக் ஏகாள்ளுங்கபா
நாயிங்கள." போலீஸ்காரர்கள்
கத்தினர்.

" வேண்பாம். அவர்களைத்
ஏதாக்கூடாது." நாயின்தார் இட்டிரயின்
முகத்துக்கு நேரே ஏரலை நீட்டினார்.
" இட்டிரா, இந்தக் ஏகாலைகளுக்கு
எல்லாம் நீ தான் காரணம். உனக்கு
ஏகயின். ஞாபகம் வைத்துக் ஏகாள்".

கோபத்துடன் நாயின்தாரும்
அதிகாரிகளும் வேகமாக நடந்தனர்.
ஏராம்ப நாட்களுக்குப் பிறகு -
மன்னரு உத்தரவு.

திருவிதாங்கூர் மகாராஜா
தலைவாலையையும் முலை வாலையையும்
ரத்து ஏய்த வெட்டார்.

நன்றி ! இந்தியா டுடே (மலையாளம்)
நவம்பர் 8, 2000

மலையாளத்திலிருந்து தமிழில் -
ப. ஜீவகாருண்யன்.

சாலச்சுவடு, ஜூலை - ஆக. 2003.

கவிதை.

இருப்பின் உயிர்த்தெழுதல்.

எனையறியாமல்
வழி தெரியாமல்
அருள் போல் கவியும்
துன்பம் எனை.
காலம்
மொழி
உறவு
இருப்பு
பிரக்ஞை
எல்லாம்
கடந்து போயிருக்கும்
மனது.
வெளிப்பகுந்த
மொழி தெரியாமல்
புது மொழியை
கட்டியணைக்கும்
முயற்சியில்
மூட்டி மோதும்
என் முனை.
எனைப் போர்த்திய
இருளை ஒலைக்க
கடவுள்
மதம்
சாராயம்
புகை
காதல்
இன்னும்
இன்னும்
எதை எதையோ
தேடி
அவற்றால்
முடியாது

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

என
சில மணிக்குளிகளில்
தொரிந்து
மீண்டும்
இருளுக்குள்
முடங்கி விடும்
பலவீன தேயம்.
நண நேரத்துக்குள்
எனது
ஆதியையும்
அந்தத்தையும்
ஆராய
முயற்சித்து
தோல்வியைத் தழுவும்
சிந்தனையின்
ஆதாரப் பருப்பொருள்.

எல்லா
தத்துவங்களும்
சாத்திரங்களும்
வாழ்க்கை முறைகளும்
எனைச் சூழ்ந்து
இருளைக் கண்டு
பறமுதுகு காட்டி ஓடும்.

என்றாலும்
ஒவ்வொரு முறையும்
என்னை விட்டு
இருள் பறந்தோடும்
எதிர் பாராத
நிகழ்வுகளால்.

ஒரு முறை...
பரட்டைத் தலையுடனும்
துவைக்கவே வேண்டாம்
என அணிந்திருந்த
ஆடையுடனும்
அருக்காலி
ஒரு சுற்று
பெருத்த
தோலுடன்
ஒரு குழந்தை
இன்னொரு குழந்தையை
இடுப்பில் வைத்துக் கொண்டு
கை யேந்தியது
'அண்ணா' வென.

இன்னொரு முறை...
ரோட்டில்
திடீரெனப் பாய்ந்து
குட்டி ஆடு
பேருந்தின்
சக்கரங்களினடியில்
உயிர் தியாகம்
செய்தது.

மற்றுமொரு முறை...
ஒரு கிழவன்
இடுப்பின்
பெரும் பகுதி
மறைந்தும்
ஆண் குறி மட்டும்
தெரிய
ஒரு
உணவு விடுதியின்
ஓரத்தில்
எச்சிலைகள்
விழுமிடத்தில்

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

மல்லாந்து
கிடந்தான்...
அங்கேயிருந்த
நாய்களின்
போஜனத்திற்கு
கிடைக்கலாய்.

இப்படி
ஒவ்வொரு முறையும்
எதிர் பாராமல்
என் கருள்
ஒலக
நான்
மனிதன் என
நினைவுக்கு வர
மீண்டும்
என் மொழி
உறவு
இருப்பு
காலம்
பிரக்ஞை
எல்லாம்
என் மூளைக்குள்
மீண்டு விட
என்
நிகழ்காலம்
மற்றும்
எதிர்கால
இருப்புக்கு
தயாராகிக் கொள்கிறேன்
ஒவ்வொரு முறையும்!

– ஜீவன் BSMS

BUCHENWALD : நாம் என் மறக்கக் கூடாது?

சாதாரணமாகிப்போன குரூரத்தின் அடையாளம்....



AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

பிம்பங்கள்

BUCHENWALD : நாம் ஏன் மறக்கக் கூடாது?

பயணக் கட்டுரை. - GEETA DOCTOR.

Ettersberghill அதன் உச்சியில் ஏறி நின்று பார்க்கும் போது, ஜெர்மனியின் நாட்டுப்புற பகுதியான Thuringia மங்கலான நிலவானத்தின் கீழ் விரிந்து கிடக்கிறது. அங்கு விரைவிலிருக்கும் நிசப்தமும், சாந்தமும், நீங்கள் Buchenwald Camp-ன் தாரணையைத் தாண்ட விரும்பச் செய்யாது, வாசலைத் தாண்டி அமைதிக்குப் படைகள் சென்ற தருணத்தை, 1945 ஏப்ரல் 11ல் அந்த அமைதிக்குப் படைகள் துள்ளாடி அம்முகாமை அடைந்த போது ஏற்றுச் சென்ற தருணத்தை, முதன் முறையாக கற்பனையை உறைய வைக்கும் மனித சிதைப்பாடுகளை காண விரைந்தபடியே, அவர்கள் விட்டுச் சென்ற தருணத்தை நீங்கள் பின் தொடர விரும்பமாட்டீர்கள். சக மனிதர்களுக்கு எதிரான அக்கிரமங்களை, தற்பொழுது சாதாரண விஷயமாகி விட்ட அக்கிரமங்களை நீங்கள் காண மறுப்பீர்கள். சாகடிக்கப் படுபவர்களின், சித்திரவதை செய்யப் படுபவர்களின் புள்ளி விவரங்களுக்கு மத்தியில், வெறுமையான அப்புள்ளி விவரங்களுக்கு மத்தியில் சிலருக்கு மட்டுமே உண்மை உறைக்கிறது. ஆம், அந்த வெறுக்கத் தக்கவர் நீங்களாகவும் இருக்கலாம்.

இறந்த உடல்களின் பெரும் கனம் Buchenwald மலைப் பிரதேசத்தில் இன்றும் உணரப் படுகிறது. Buchenwald - The forest of birch trees என்ற அர்த்தத்தில் Heinrich Himmler என்ற ஹிட்லரின் விசுவாசமுள்ள லெப்டினண்ட்டால் பெயரிடப்பட்டது. Buchenwald ல் ஏற்படுத்தப்பட்ட நினைவுச் சின்னம் இங்கே நடந்ததை யாரும் நினைவு மறக்க முடியாது என்பதை உறுதிப் படுத்தவே ஆகும். Buchenwald இங்கே நடந்த ஒவ்வொரு கொடுமையையும் பதிவு செய்துள்ளது.

ஒரு குளிர்ந்த காற்று மேகங்களை மடித்துப் போட்டதை நாங்கள் பார்த்தோம். அங்கிருந்த மரங்கள் கூட வக்ரமும் உள்ளதாய் இருந்தது. அவை ஒரு கறுத்த காவலாளியைப் போல் நின்றன. அவைகளில் எந்த பறவையினமும் குரல் எழுப்பவில்லை — இந்நீண்ட காலத்திற்கு முன்கூட.

Buchenwald ன் மிக அருகில் கோர்த்தி மிக்க நகரமான Weimar நகரம் உள்ளது. 1999 ல் ஜெர்மனியின் போற்றப்படும் படைப்பாளியாயிருந்த GOETHE ன் 250-வது முன்றாண்டை ஒட்டி இது ஐரோப்பியக் கலாச்சார நகரமாக முன்னிறுத்தப் பட்டது.

* GOETHE — மேற்கு ஐரோப்பாவின் படைப்புலக கும்கோர்த்திகளில் ஒருவர். மற்ற இருவர், SHAKESPEARE, THANDE [ITALY]

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

Weimer ன் பொற்காலத்தை GOETHE வழிநடத்தினார். அவர் ஞானாந்தியும், கலையழகும் சிறந்து விளங்கிய மேதைதனை தம் நகரத்திற்கு அழைத்தார். அந்நகரம் தனது சுதந்திரமான தனிச்சிறப்பு நிலை கொண்டு நின்றது. Ettersburg மாளிகையில் "Court of Muses" யும், இசை நிகழ்ச்சிகளையும், கவிதை மற்றும் நற்கலைவார்த்த விவாதங்களையும் GOETHE பங்கு பெற்றார். இவை அனைத்தும் திடீரென Anna Amalia-வால் உற்சாகப் படுத்தப் பட்டது. GOETHE 1829, செப்டம்பர் 26-ல் ஒரு கடிதம் "Thuringia வை அரிந்த பார்வையில் காண்கிறேன்" என்று குறிப்பிட்டவாறு, அவர் அம்மாளிகையின் உச்சிக்கு சென்று வெளிப்புறத்தைப் பார்த்த நேரத்தில் அவர் அறிந்திருக்க மாட்டார், அந்த Thuringia தான் Buchenwald க்கு கட்டப் பட்டும் ரத்தம் தோய்ந்த பாதையென்று.

ஆரம்பத்தில் Buchenwald ஒரு சிறைக் கூடமாகவே இருந்தது. கைதிகளுக்கான ஒரு பெரிய பகுதி, quarantine camp என்ற சிறிய பகுதி, பொறுக்கு கைதிகளுக்கான ஒரு சிறிய பகுதி. போர் தீவிரம் அடைந்ததும் அக்கைதிகள் அருகில் உள்ள Gustloff factory ல் போர் தளவாடங்களை உற்பத்தி செய்ய நிர்ப்பந்திக்கப் பட்டனர். மேற்கு கைதிகள் இப்பணியில் மட்டுமன்றி ரக கைதிகளை நிந்திரவதை செய்யவும், கொடுமை செய்யவும் கட்டாயப்படுத்தப் பட்டனர். மற்ற முகாம்களைப் போல இது சாகடிக்கும் முகாமல்ல. Buchenwald ஒரு கொத்தடிமை முகாமாக இருந்தது. இங்கு மக்கள் இறந்தால் ஒன்று அவர்கள் வேலைப் பணியை நாங்காமல் இறந்திருக்க வேண்டும் அல்லது நப்பையோட முயற்சித்த போது காவல் நாய்களால் நார் நாராய் கிழிக்கப்பட்டு மாண்டிருக்க வேண்டும் அல்லது சுடப்பட்டு செத்திருக்க வேண்டும். 1937 முதல் 1945 வரை 2,80,000 பேர் இங்கு சிறையில் இருந்தார்கள். அதில் 50,000 பேர் உயிர் இழந்தார்கள். அவர்கள் பெரும்பாலும் அரசியல் கைதிகள், Gypsie கள் [ஏறத்தாழ 5,00,000 Gypsie கள் நாஜிகளால் கொல்லப்பட்டார்கள்] ஊனம் அடைந்தவர்கள், பெண்கள், குழந்தைகள். ஆனால் புள்ளி விவரம் கத்துடன் நின்று விடுவதில்லை. போரின் இறுதியில் 28,000 கைதிகள் இங்கிருந்து வெளிமேற்றப் படு நடத்திச் செல்லப்பட்டனர். அதுவே "இறந்தவர்களின் ஊர்வலம்" என்று பெயர் பெற்றது. யூத கைதிகள், குழந்தைகள், அத்தலைமுறையின் சிறந்த சிந்தனைவாதிகள் என்று அனைவரும் அதில் அடங்குவர்.

"குழந்தைகளின் சிறிய காலணிகளையும், தொப்பிகளையும் என்னால் கண்கொண்டு பார்க்க முடியவில்லையே" என்று அடக்க மாட்டாமல் அழுதாள் என் வழிகாட்டி, Buchenwald ல் இருந்து மீண்டவர்களைப் பற்றிய ஒரு குறும்படத்தை பார்க்கும் பொழுது என்னருகில் அமர்ந்திருந்தாள் அவள்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

ஆடுகளைப் போலவும் பன்றிகளைப் போலவும் கைதிகள் நிறைந்த வைக்கோல் நிறைந்த வாகனங்களில் ஏற்றப்பட்டதை, கவிழ்க்கப்பட்டதை, அவர்கள் முடி அகற்றப்பட்டு கிருமிநாசினி மருந்தில் முக்கி எடுக்கப்பட்டதை அச்சுறுத்தும் வெள்ளை சித்திரம் காட்டியது. எத்தனையோ குழும்படங்களை விட இது மிகக் கொடுமையானதாக இருந்தது ஏனெனில் அது முற்றிலும் உண்மை. நேச நாடுகள் Buchenwald ல் நுழைந்தபோது காவலாளிகள் அனைவரும் தப்பி விட்டனர். நாங்கள் சுதந்திரமாகி விட்ட நிலையிலும் அக்கைதிகள் மகிழ்ச்சியோடு இல்லை. அவர்கள் மிகவும் சோர்ந்து போய் இருந்தனர். உயிருள்ள உடலா அல்லது பிணமா என்று நேச நாட்டு வீரர்கள் குழம்பி போய்விட்டார்கள். இந்தக் குழும்படத்தைப் பார்த்த ஐரோப்பிய கூட்டத்தில் மிகக் குறைந்தவர்களே இதற்கு முன்னும் புதியவர்களின் கண்களின் கண்ணீர் துளிக்க முடியாதவாறாய் இருந்தது. ஒரு சந்தர்ப்பத்தில் நாங்கள் ஒவ்வொருவரும் ஒரு உண்மையான சுதந்திரத்தை - பார்போம் - அது குரூரம் பற்றியது, சாதாரண வலையமாகி விட்ட குரூரம் பற்றியது.

அம்முகாம் தளபதியின் மனைவியான அழகான சிவந்த முடியுடைய Ilse Coch போலத்தான் நாம் நடந்திருப்போமா? அவளின் பொழுதுபோக்கான - விளக்கு அவ்வாறு இணைந்தால் - மென்மையான தோலை, சிறந்த பச்சைக் குத்தப்பட்ட தோலையுடைய கைதிகளை உரித்தெடுத்து அலங்கார வளையங்களாக அணிவதை நாமும் செய்திருப்போமோ? கைதிகளின் கட்டை விரலிலிருந்து செய்யப்பட்ட Switch களை நாமும் செய்யக் கேட்டிருப்போமோ?

மரணக் கூடாரம் என்று பெயர் பெற்ற அறைகளினூடே நடக்கும்போது என் வழிகாட்டி அதைப் பற்றி கூறினார். கொல்லப்பட வேண்டிய கைதிகளை மருத்துவப் பரிசோதனை என்ற பெயரில் அடைந்து வருவார்கள். அவர்களின் எடையும், உயரமும் கணக்கிடப்படும். இறுதியாக பற்களைச் சோதனை செய்ய ஒரு நாற்காலியில் அமர்த்தப்படுவார்கள். பின்புறத்திலிருந்து அவர்கள் தலை மீது சிதறடிக்கப்படும். அம்மரணக் கூடாரத்தின் சுவரில் அந்த ஒரேயொரு தனி மாடம் எங்கிருந்தது. கொல்வதற்கான, மனிதாபிமான முறையாக அது கருதப்பட்டது. இறந்த உடல்கள் அதே கட்டிடத்தில் உள்ள குழியில் எரியூட்டப்படும். பிற்காலத்தில் Buchanwald சோவியத் யூனியனால் கைதிகள் முகாமாகப் பயன் படுத்தப்பட்டது.

நாங்கள் கொடுமை மிக்க கடந்த காலத்தைப் பார்க்கும் ஜெர்மானியின் மனப்பாங்கை அறிவது கடினமாகி உள்ளது. நாங்கள் தந்தைமார்களின் பாவங்களை திருப்பித் திரும்ப எதிர்கொள்வதற்காக அவர்கள் ஆத்திரப்படுகிறார்களா? அவர்கள் கடந்த காலத்தை பின்தள்ள விட வேண்டும். Simon Wiesenthal என்ற 94 வயது நாஜி வேட்டையரே கூறுகிறார். "நான் எதிர்பார்த்த பரும் கொலைகாரர்களைப் பார்த்து விட்டேன். அவர்களுக்கு எல்லோரையும் கொன்ற

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE